500

Regd. No. M. 2797.

(விலை அணா ஒன்று.)




# VARTHAGA OOLIAN.

Trichinopoly. | Monthly Journal of Commerce, Trade and Industry. | February 1937

மலர் 5.] திருச்சினாப்பள்ளி பிப்ரவரி-மீ 1937 [இதழ் 56

" வர்த்தக ஊழியன் " வருட சந்தா.

உள்நாட்டிற்கு ரப் ரூ. 1. கி. ரூ. 3 வெளி நாட்டிற்கு ரூ. 1½

மாதம் ஒன்றுக்கு விளம்பர விகிதம்.

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 1—0—0.

பக்கம் ஒன்றுக்கு ரூ. 15—0—0.

அரை பக்கத்திற்கு ரூ. 10. ராப்பர் பக்கத்திற்கு ரூ 25.

முன்பணமில்லாத விளம்பரங்கள் பிரசுரிக்க முடியாது. நீடித்தகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு.

அட்டவணை.


வருமானவரி ரிபோர்ட் ... 155

இந்திய வர்த்தக சபை ... 156

அரசியல் நிலைமை ... 157

இந்தியாவில் குறிப்பிடத்தக்க இஞ்ஜினீரிங் திட்டங்கள் ... 158

மதிப்புரைகள் ... 161

Share Market Report ... 162

Crop Reports ... 164

Trade Recipes ... 165


28 APR 1937 ... MADRAS

"VARTHAGA OOLIAN"

Annual Subscription.

Inland Rough Re. 1. Glaze Rs. 3. Foreign Sh. 4.

Advertisement Tariff Per Insertion..

One inch Re. 1—0—0. One Page Rs. 15—0—0

Half Page Rs. 10—0—0. Wrapper Page Rs. 25

Advertisement without prepayment will not be considered. For further particulars write to the Manager.

RECEIPT OF A COPY OF

## 'VARTHAGA OOLIAN'

IS AN INVITATION TO SUBSCRIBE OR TO ADVERTISE.

*All Correspondence, Money Orders, etc., must be addressed to:—*

*THE MANAGER,*

**"VARTHAGA OOLIAN",**

TRICHINOPOLY, SOUTH INDIA.

Trade Mark.

Registered.

ஒரிஜினல்

கல்ச்சர் வைரங்கள்

விலை தோடு சைஸ் கமலம் ஒன்றுக்கு எட்டணா.

விலை பேசர் சைஸ் கமலம் ஒன்றுக்கு ஆறணா.

கேட்லாக் இனம்.

சொ. அருணாஜலம் செட்டி,

மு. ராமசாமி செட்டி,

ஷருப் வியாபாரம், திருச்சினாப்பள்ளி.

Subscribe to

**The Egyptian Trade Review.**

**Leading Monthly organ of economic information published in the Near East.**

***You will thus be kept regularly informed concerning:***

Import and Export Statistics
State of the Markets, prices, Customs tariff, etc.
Progress of National Industries
Trade Methods
New Firms constituted
Bankruptcies and Composition Schemes,
etc. etc.

Informations will also be supplied to all concerning Egyptian Market

**Annual Subscription: abroad £0-12-0**

*Address:*— **ALEXANDRIA, EGYPT.**

**'Varthaga Oolian'**

*(Monthly Journal of Commerce Trade and Industry)*

**Independant Journal with trenchant views.**

Gives hundreds of practical ideas of money making.

The best journal in South India for the earnest purposefull and ambitious businessmen.

**Pages for REVIEWS are allotted.**

Every one engaged in business should read

**VARTHAGA OOLIAN**

Best medium for Businessmen to advertise.

*Annual subscription Re. One only.*

*Apply to:*
The Manager,
**"Varthaga Oolian,"**
TRICHINOPOLY,
South India.

23 APR 1937

"நாணயம் நனி பேண்"

# "வர்த்தக ஊழியன்"

திருச்சினாப்பள்ளி

1937-௵ பிப்ரவரி-௴

## வருமானவரி ரிபோர்ட்.

(Incometax Enquiry Report.)

—

இந்தியாவில் வருமானவரி விதிக்கப்பட்டுவரும் முறையைப்பற்றிபலர் ஆக்ஷேபனைகள்செய்ததின்மேல் இந்திய கவர்ன்மேண்டார் இப்போதைய நிலைமையைப்பற்றி விசாரணை செய்து தகுந்த யோசனைகளையும் பரிகாரங்களையும் சோல்லும்படி சேன்ற **1935**-ம் வருடத்தில் பம்பாய் வருமானவரி கமிஷனரையும், இரண்டு பிரிட்டிஷ் நிபுணர்களையும் நியமித்தார்கள். அவர்கள் இந்தியா முழுதும் சுற்றுப் பிரயாணம்செய்து விசாரணை செய்து தங்களுடைய ரிபோர்ட்டை அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய ரிபோர்ட்டில் வருமானவரி இலாக்காவில் போது ஜனங்களுக்கு அதிருப்தியிருந்து வருகிறதேன்பதை ஒப்பக்கோண்டு பல சிபார்சுகள் சேய்திருக்கிறார்கள். அவைகளில் அன்னியநாட்டு வருமானம், விவசாய வருமானம், ரஜா சம்பளவருமானம்,மனைவிகள்அலவன்சு வருமானம், இன்சூரன்ஸ் கம்பேனி வருமானம், முதலானவைகளும் உத்தியோகஸ்தர்கள் வரி கோடுப்போர்களின் சௌகர்யத்தை கவனிக்க வேண்டுமேன்றும் எல்லா வரி விதிப்பும் அப்பீலுக்குட்பட்டிருக்கும் அஸிஸ்டேண்டுகமிஷனர்கள் அப்பீல் அதிகாரிகளாகவும், இரண்டாவது அப்பீல் அகிலஇந்திய சபையில் விசாரிக்கப்படும்படிக்கும் இந்தியாமுழுதும் வருமானவரி நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த வருமான வரி சீப் கமிஷனர் நியமிக்கப்படவேண்டுமேன்றும் வருமானவரிகோடுக்கலாயக்குள்ளவர்கள் தாங்களே கணக்குகளை அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டுமேன்பதும் முககியமானவைகள்.

அன்னிய நாடுகளில் முதல் போட்டு கிடைக்கும் லாபத்துக்கு வருமான வரி போடாமலிருந்தார்கள். அதற்கும் இனிமேல் வரி விதிக்கவேண்டுமேன்று சோல்லுவதும் அதேபோல் அன்னியர்கள் இந்தியாவில் முதல்போட்டு லாபம் சம்பாதிப்பதற்கும் வரிவிதிக்கவேண்டுமேன்று சிபார்சு சேய்திருப்பதை எல்லோரும் ஒப்புக்கோள்வார்கள். ஆனால் நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திற்கும் வரி போடவேண்டுமேன்று மறைமுகமாக சோல்லுகிறார்கள். அதாவது வரி போடும் போழுது நில வருமானத்தையும் சேர்த்து வருமான வரி விதிக்கவேண்டுமேன்றும் ஆனால் நில வருமானத்திற்கு தனிப்பட்ட வருமானவரி விதிக்கக்கூடாதேன்று சிபார்சு சேய்திருக்கிறார்கள். எவ்விதமான முறையாகயிருந்தாலும் நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை வருமான வரிவிதிக்க சேர்த்துக்கோள்ளக்கூடாது. இதனால் பல இடையூறுகள் உண்டாகுமேன்பதற்கு சந்தேகமில்லை. மேலும் இந்தியாவில் உத்தியோகம் சேய்துவிட்டு ரஜாவில் சேல்லுபவர்களுக்கும், வேலையிலிருந்து விலகி பேன்ஷன்பேறுபவர்களுக்கும் வருமானவரி விதிக்கவேண்டுமேன்பதையும் நாம் ஒப்புக்கோள்ளுகிறோம். ஆனால் மனைவிகளுக்கு கிடைக்கும் வருமானத்திற்கும் வரி விதிக்கப்படவேண்டுமேன்று சோல்வது மிகவும் அநியாயம். வருமான வரி நிபுணரான மிஸ்டர் ஷராப் இதை பலமாக கண்டித்திருக்கிறார். இங்கிலாந்திலிருப்பது போலவாகிலும் மனைவிமார்கள் விஷயத்தில் சௌகரியம் சேய்யவேண்டும். சூபர்வரி விதிப்பதின் முறை சரியாகயில்லையேன்றும் படிப்படியாக விதாசாரத்தை நிர்ணயிச்க வேண்டுமேன்பதை நாமும் ஒப்புக்கோள்ளுகிறோம். மேலும் அவர்களுடைய சுற்றுப்பிரயாணத்தில் வருமானவரி சேலுத்துபவர்கள் வருமானவரி உத்தியோகஸ்தர்களிடம் அவதிப்படுவதை நேரில் பார்த்து அவைகளை நிவர்த்திக்கவேண்டுமேன்று தேரிவித்திருப்பதை கவர்ன்மேண்டார் கவனிக்க வேண்டும். இந்தியகவர்ன்மேண்டார் இவைகளை உடனே நிவர்த்திக்க ஏற்பாடு சேய்ய வேண்டும். வரிசெலுத்த லாயக்கானவர்க்ள் நோட்டீசு இல்லாமலே, வருமான கணக்கை அதிகாரிக்கு அனுப்பவேண்டுமேன்றும் அப்படி சேய்யத்தவறினால் தண்டனைவிதிக்கப்படவேண்டுமேன்றும்சிபார்சுசேய்திருப்பதானது மிககுறுகிய நோக்கமானதேன்று போதுஜனங்கள் கருதுவார்களேயன்றி மற்ற சிபார்சுகளைப் போல் ஒப்புக்கோள்ள முடியாததாகயிருக்கிறது. இதனால் வர்த்தகர்களுக்குப் பல கஷ்டங்களும் ஏற்படும். வரி விதிக்கப்பட்டபின் அப்பீல்கள் சேய்துகோள்வதற்கு பல யோசனைகள் சோல்லப்பட்டிருக்கின்றன. ஹைகோர்ட்டுக்கு இது வரையிலிருந்துவந்த அதிகாரத்தை எடுத்துவிடப்போகிறார்கள். இந்தியாவுக்கு சீப் கமிஷனர் என்றுஒருவரை நியமிக்கவேண்டுமாம். இவைகளைப் பற்றி முழு அறிக்கையும் வேளிவந்த பிறகு விரிவாக எழுதுவோம். போதுவாக பார்க்குமிடத்து போது ஜனங்களுக்கும்வருமானவரிஇலாகாவிடத்தில் அதிருப்தி யாருக்கிருக்கிறதேன்பதை இவர்களுடைய அறிக்கையிலிருந்து தேரிகிறது இந்த அறிக்கையை மாகாண கவர்ன்மேண்டுக்கும் வர்த்தக சங்கங்களுக்கும் அனுப்பி அபிப்பிராயம் கேழ்க்கப்போகிறபடியால் அச்சமயம் போதுஜனங்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை தேரிவிக்கும்படியாககேட்டுக்கோள்ளுகிறோம்.

---

## 1937-ம் வருட பலன்

*இவ்வருஷம் எல்லா சாமான்களின் விலைகளும் அதிகரிக்கும் எனவே வியாபாரம் விருத்தியாகி வியாபாரிகளுக்கு சிறந்தலாபம்கிடைக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் குறைவடையும் இந்தியாவிலேயும், உலகமுழுவதுமே தானியங்கள் அபரிமிதமாக இருக்கும்.*

# இந்திய வர்த்தக சபை.

(Indian Merchants Chamber)

இந்திய வியாபாரச் சபையின் 2-வது வருஷாந்தரக்கூட்டம் பம்பாயில் ஜனவரி-மீ 26-உ நடைபெற்றது. தலைவர் பதவியிலிருந்து விலகும் ஸர் ரஹிமதுல்லா சினாய் பேசுகையில் தமது தலைவர் பதவி காலத்தில் வியாபார சபை செய்துள்ள வேலைகளை எடுத்துரைத்தார். ஐரோப்பிய தேசங்களில் ஏற்பட்டுள்ள சம்பவங்களைப்பற்றியும், புதிய அரசியல் திட்டம்பற்றியும், அவர் விரிவாகக் குறிப்பிட்டுவிட்டு இந்திய வியாபார நிலைமையைப்பற்றி அவர் பேசினார். அவர் கூறியதன் சாரமாவது :—

வியாபார உறக்கத்தினின்று சீர்படும் அறிகுறிகளைக் காண்கிறோம். விவசாயப் பொருள்கள் விலைவாசிகள் சிறிது சீர்பட்டு வருகின்றன. பிரான்ஸில் பிராங்கு மதிப்பு குறைக்கப்பட்டு மற்ற சில நாடுகளிலும் இவ்விதம் செய்யப்பட்டிருக்க இந்தியா கவர்ன்மெண்டார் ரூபாய் மதிப்பைக் குறைக்க யாதும் செய்ய மறுத்துவிட்டனர். இதைப்பற்றி விசாரணை செய்ய இப்பொழுது பெருத்த அவசியமேற்பட்டிருக்கிறது. இங்கிலாந்து ஜப்பான் ஆகிய தேசங்களுடன் மாத்திரம் வியாபார சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் நடத்துவதுடன் இந்தியா சம்பந்தப்பட்ட மற்ற ஐரோப்பிய தேசங்களுடனும் வியாபாரப்பேச்சு நடத்தவேண்டுவது அவசியமாகிறது. பிரிட்டன் ஜப்பானுடன் செய்யு முடன்படிக்கைகளிலும் இந்த நாட்டின் நன்மையை கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டுவது மிக அவசியமாகிறது, இலங்கையில் இந்தியருக்கெதிரான உணர்ச்சி காட்டப்படுவது மிகவும் வருந்தக்கூடியதாகும். ஜப்பானிலும் ஆப்பிரிக்காவிலும் இந்தியா கவர்ன்மெண்டார் வியாபாரக் கமிஷனர்களை நியமிப்பது வரவேற்கக் கூடியதாகும். ஸான்ஸிபார் இந்தியர் விஷயத்தில் பைண்டர் கமிட்டி செய்துள்ள அநீதி கண்டிக்கக் கூடியதாகும். இந்தியா கவர்ன்மெண்டார் இதில் இந்தியர் சார்பாக அக்கரைக் காட்டவேண்டுவது மிக அவசியமாகிறது. சாமான்களைத் திருட்டுத்தனமாக வாயின்றி பிரிட்டிஷ் பிரதேசங்களில் கொண்டு வாராமல் தடுக்கக் கவர்ன்மெண்டார் நடவடிக்கை யெடுத்துக்கொண்டிருப்பது திருப்தியளிக்கக்கூடிய விஷயமாகும். இதனால் கவர்ன்மெண்டு வருமானம் அதிகரிக்கக்கூடும்.

## புதிய தலைவரின் பிரசங்கம்.

வியாபார சபையின் புதிய தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் ராஜாபகதூர் கோவிந்தலால் சிவலால் மோதிலால் பிறகு பேசியதன் சாரமாவது:-இப்பொழுது நாமுள்ள நிலைமையில் அரசியலை வியாபார விஷயங்களிலிருந்து விலக்குவது சாத்தியமில்லை அரசியல் என்பது பலவகைகளாக விருக்கலாம். ஆனால், நமது வியாபாரச் சபை, இந்திய வியாபாரச்சபைகள் சம்மேளனம் ஆகியவை சம்பந்தப்பட்ட வரையில் தேசீய உணர்ச்சி கொண்ட அரசியல் அவசியமாகிறது நமது வியாபாரச்சபை எவ்வித குறிப்பிட்ட ராஜீயக் கக்ஷியுடனும் சேர முடியாதாயினும், தேசீயக் கோரிக்கைகளுக்கேற்ப நமது வியாபார சபையின் கொள்கையும் திட்டமும் இருந்து வரவேண்டும். அன்னிய ஆட்சியின் பிற்போக்கான கொள்கையிருப்பினும் நம் நாட்டில் கைத்தொழில் அபிவிருத்தி கிரமமாக ஏற்பட்டு வருகிறது. இந்தியா ஒரு முக்கியக் கைத்தொழில் தேசமாகிக்கொண்டு வருகிறது. ஆனால், நமது கைத்தொழில்களுக்குத் தகுந்த பாதுகாப்பளிக்கப்படவில்லை. நமது கைத்தொழில் அபிவிருத்திப் பிரச்னையை நாம் சரியானபடி தீர்ப்பதினாலேயே இந்நாட்டின் எழ்மைப் பிரச்னையை தீர்க்கக்கூடும் கதர் அபிவிருத்தி குடிசைத்தொழில் அபிவிருத்தி ஆகியவற்றையும் நாம் செய்யவேண்டும். இது கைத்தொழில் அபிவருத்திக்கு விரோதமானதல்ல. அதற்குதவியாகவேயிருக்கக்கூடும் குடிசைத் தொழில் கிராமாபிவிருத்தியிலும் கவர்ன்மெண்டார் ஒன்றும் செய்யவில்லை. காந்திஜீ கவனஞ்செலுத்திய பின்னரே கவர்ன்மெண்டாரும் யாதோ செய்ய முற்பட்டனர். இந்நாட்டில் கவர்ன்மெண்டார் ஜனப்பிரதிநிதிகளல்லவாதலால் அவர்கள் உத்தியோகப்பற்றற்றவர்கள் யோசனைகளை கேட்டு நடக்கவேண்டுமென்பதிருக்கவேண்டும். இங்கிலாந்து ஜப்பானுடன் மற்ற ஐரோப்பியத் தேசங்களுடனும் இந்திய கவர்ன்மெண்டார் வியாபார பேச்சு நடத்தவேண்டும் இதில் இந்தியாவில் கைத்தொழில் நன்மையை எப்படிப் பாதுகாப்பதென்பதையே முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

## இந்திய கப்பல் வியாபாரத்திற்கு ஆதரவில்லை.

இந்திய வியாபாரச் சபையில் புதிய உபதலைவரான ஸ்ரீமான் கோவர்த்தனதாஸ் முரார்ஜி பேசுகையில் இந்திய ஜப்பானிய வியாபார ஒப்பந்தம்பற்றிப் பேசுவதில் இந்தியக் கப்பல் வியாபாரம் கவனிக்கப்படவில்லை யென்றும் பிரிட்டிஷ் கப்பல் வியாபார நிலையே கவனிக்கப்படுகிறதென்றும் இந்தியாவின் வெளிநாட்டு வியாபாரத்தில் இந்தியக் கப்பல்களுக்கு இடமேயில்லாமலிருக்கிறதென்றும், பி & ஒ கம்பெனி இந்தியக் கப்பல் வியாபாரத்தைக் கெடுக்கும்படியான சூழ்ச்சிகளை செய்து வருவதாகவும், இந்தியா கவர்ன்மெண்டார் சுயநலம் கருதும் பிரிட்டிஷ் கப்பல் வியாபாரிகள் கூறுவதற்கு இணங்கக்கூடாதென்றும் சொன்னார்.

---

## வைரங்கள் இறக்குமதி அதிகம்.

## 1937-ல் விலை குறையும்.

தங்கம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது, ஆனால், வெளி நாட்டு வைரங்கள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. 1934-ல் 36 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய்க்கு வைரங்கள் இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால், 1935-ல் 65 லட்சத்து 35 ஆயிரத்துக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது.

1936-ல் வைரக்கற்கள் இறக்குமதி இன்னும் அதிகம். அதாவது 80லட்சம் சொச்சத்திற்கு அதிகமாயிருக்கிறது. இதுபற்றி 1937-ல் வைரங்களின் விலை குறைந்துவிடுமென்றும் பம்பாயில் பெரிய வைரவியாபாரி அபிப்பிராயப்படுகிறார்.

# அரசியல் நிலைமை.

(நமது ராஜிய நிருபர்)

இம்மாதம் நடைபெறும் மாகாண சட்ட சபைகளின் தேர்தலுக்கு, காங்கிரஸ், ஜஸ்டிஸ், ஜனநாயகம் ஆகிய மூன்று கக்ஷியினரும் தங்களுடைய அபேக்ஷகர்களை நியமித்திருக்கிறார்கள். மற்றும் ஒரு கக்ஷியிலும் சேராத தனிப்பட்டவர்களும், முஸ்லீம் பார்லிமெண்ட் கமிட்டியாரால் நியமிக்கப்பட்ட பலரும் அபேக்ஷகர்களாக முன் வந்திருக்கிறார்கள். இந்த சமயத்தில் வாக்குரிமையுடைய மக்கள் யாரை தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதைப் பற்றிய நமது அபிப்பிராயத்தை தெரிவிக்க விரும்புகின்றோம். காங்கிரஸ் கக்ஷியினர் தாங்கள்தான் இந்த நாட்டுக்கு உழைப்பார்களென்றும் தங்கள் பிரதிநிதிகளையே புதிய சட்டசபைக்கு வாக்காளர்கள் அனுப்ப வேண்டுமென்றும் கூறுகிறார்கள். ஜஸ்டிஸ் கக்ஷியினரும் தாங்கள் சென்ற பதினேழு ஆண்டுகளாக தென்னிந்தியமக்களுக்கு சட்டசபை மூலமாகவும் தங்களுடைய அதிகாரப்பதவியின் மூலமாகவும் பல நன்மைகளை செய்திருப்பதாகவும் புதிய சட்ட சபையிலும் மீண்டும் தங்களையே வாக்காளர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பும்படியும் வருங்காலத்திலும் தாங்கள் அதிகாரத்திலிருந்தால் மக்களுக்கு இன்னும் பல நன்மைகள் செய்யக்கூடுமென்றும் கூறுகின்றார்கள். ஜனநாயக கக்ஷியினரும் தாங்கள் தேர்தலில் வெற்றிபெற்றால் பொதுஜனங்களுக்கு தங்களால் இயன்றவரையிலும் மக்களுக்கு ஊழியம் செய்வதாகவும் தெரிவித்திருக்கின்றார்கள். எனவே அரசியல் சம்பந்தப்பட்டமட்டிலும் மேலே சொல்லப்பட்ட மூன்று கக்ஷியினரும், வாக்காளர்களுக்கு நன்மை செய்யவே சட்டசபைக்கு செல்வதாக கூறுகின்றார்கள். இதனால் கக்ஷி மூன்றாயினும் சேவை ஒன்றுதான் என்பதை எக் கக்ஷியினரும் மறுக்க மாட்டார்கள். இன்றைய நிலையில் ஒரு தாய் வயிற்றில் உதித்த இருவரில் ஒருவர் காங்கிரஸ் என்றும் மற்றொருவர் ஜஸ்டிஸ் என்றும் பெயரிட்டிருக்கிறார்களே தவிர, இதர விஷயங்களில் இருவரும் அண்ணன் தம்பிகள்தான், இனி வாக்காளர்கள் யாரை சட்டசபைகளுக்கு அனுப்ப வேண்டுமென்றால் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து புதிய சீர்திருத்த சட்டத்தில் கண்ட குறைகளை நீக்கி கூடுமானவரையில் நாட்டிற்கு நன்மையுண்டாக்கும் வழிகளைக்கண்டு அதன் மூலம் பொதுஜனசமுகத்திற்கு தங்களால் இயன்ற வரையிலும் தொண்டு புரிவதாக யார் முன் வருகின்றார்களோ அவர்களையே வாக்காளர்கள் தேர்ந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்பவேண்டும். வீணான ஆர்ப்பாட்டங்களையும் தயவு தாக்ஷண்யத்தையும் வாக்காளர்கள் கவனிப்பார்களாயின், தங்களுடைய, எதிர்கால வாழ்க்கைக்கு இடைஞ்சலை தாங்களே தேடிக் கொண்டவர்களாவார்கள். ஆகையால் "கக்ஷி" என்னும் பெயரைப் பாராமல், அபேக்ஷகர், காங்கிரஸ் என்றாலும் ஜஸ்டிஸ் என்றாலும் ஜனநாயகம் என்றாலும் அவர்களில் யாரை தேர்ந்தெடுத்தால் நன்மையுண்டாகும் என்பதை நன்கு கவனித்து தங்கள் வாக்குரிமையை உபயோகிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

* * *

தனவணிக சமுகத்தின் பிரதிநிதியாக, குமாரராஜா திரு. எம். ஏ. முத்தய்யாசெட்டியார் அவர்கள்புதியசட்டசபையின் அங்கத்தினராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். திரு குமாரராஜா முத்தய்யா செட்டியார் இப்போது, சென்னை அரசாங்கத்தின் கல்வி மந்திரியாக இருந்துவருகின்றார். தனவணிக சமுகத்தில் இவருக்கு போட்டியாக யாரும் வரக்கூடாதென்ற நோக்கத்தைக்கொண்டு, பல கனவான்கள் விலகிக்கொண்டதாகவும் தெரியவருகின்றது. சென்ற நவம்பர்-மீ வெளிவந்த "வர்த்தக ஊழியனில்" எழுதியிருந்தபடி திரு. குமாரராஜா அவர்கள் புதிய சட்டசபையிலும் ஒரு மந்திரியாக வருவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

## தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் சங்கம்.

வரும் சென்னை சட்டசபை, அஸெம்பிளி தேர்தல்களில் அபேக்ஷகர்களுக்கு பலதொகுதிகளிலும் இருக்கும் வாக்காளர்கள் செய்துகொள்ள வேண்டிய விக்ஞாபனம் :—

அபேக்ஷகர்கள் அடியில் கண்ட காரியங்களை சாதித்து வாக்காளர்களுக்கு அவர்களுடைய கடமையை செய்ய இயன்ற அளவு முயற்சி செய்ய வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(1) இந்த ராஜதானியின் ரயத்துவாரி நஞ்சை, புஞ்சை நிலங்களின் தற்காலமுள்ள மொத்த தீர்வை விகிதத்தை 100-க்கு 50 வீதம் உடனே குறைப்பது.

(2) இப்பொழுதுள்ள புஞ்சை தண்ணீர் தீர்வை நஞ்சை இரண்டாம்போக தண்ணீர் தீர்வை இவைகளின் விகிதத்தை பெரும்பான்மையும் குறைப்பது;

(3) நிலத்தீர்வை வகையறா விதிப்பைப்பற்றி ஒருமசோதாகொண்டுவந்து அதில் நஞ்சை புஞ்சை நிலங்களின் நிகர் வரும்படியின் நான்கிலொருபாகத்துக்குமேல் நிலவரி வகையறா இருக்கக்கூடாதென்று (1935-ம் வருஷத்திய இந்தியவரி விசாரணைக் கமிட்டியாரின் சிபார்சுப்படி) ஒரு முக்கியமான விதி செய்து அதை சட்டமாக நிறைவேற்றி வைப்பது;

(4) உயர்தர உத்தியோகஸ்தர்களின் சம்பளம், படி வகையறாவையும், மற்ற நிருவாக செலவையும் 1918—19-வருஷத்தில் வழங்கி வந்த விகிதத்துக்கு உடனே குறைத்து நிர்ணயித்தும் எப்படியும் கடைசியாக அவைகளை நம் தேசத்தின் நிலைமைக்கு ஒத்தபடி படிப்படியாகக்குறைத்தும் விடவேண்டியது. புதிதாய் நியமனமாகும் உத்தியோகஸ்தர்களின் ஆரம்ப சம்பளத்தையும் உயர்வையும், நம்தேச ஜனங்களின் சராசரி வரும்படியை அனுசரித்து நிர்ணயிப்பது;

# இந்தியாவில் குறிப்பிடத்தக்க இஞ்ஜினீரிங் திட்டங்கள்.

## லாய்டு தண்ணீர் தேக்கம்

இது உலகத்திலுள்ள பெரிய நீர்ப் பாசன திட்டங்களிலெல்லாம் மிகப் பெரியது. இது சிந்து மாகாணத்தின் 55 லக்ஷம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள காலிநிலங்களை சாகுபடி செய்ய உதவும்.

## லாய்டு அணை

(பாட்காரிலுள்ளது.) இதுவரையில் உலகத்தில் கட்டப்பட்டுள்ளவைகளைக் காட்டிலும் மிகப் பிரமாண்டமான சிறந்த அணைக்கட்டு. 2,15,000,00 கன அடிகள் கொண்டது. மிகப் பெரியதெனச் சொல்லிக்கொள்ளப்படும் ஜிப்டிலுள்ள அசுயன் அணைக்கட்டும் 1,90,000,00 சதுர அடிகளே உள்ளது. ஓர் உத்தேசமாக லாய்டு அணைக்கட்டின் பிரம்மாண்டத்தை 15 அங்குல கனமுள்ள 6 அடி உயரமான சுவர் கட்டிடமாக ஒரே நேராக நீட்டி கணக்கெடுத்தால் 520 மைல்கள் நீளமுள்ளது என ஏற்படுகிறது. அதாவது கல்கத்தாவிலிருந்து அலகாபாத் வரை இருக்கும்.

## தல்லாவிலுள்ள தண்ணீர் தேக்கம்

இது உலகத்திலேயே பெரியதென பாவிக்கப்படுகிறது. 322 அடி சதுரம் 16 அடி ஆழமுள்ளதான ஸ்டீல் தகடுகளால் டாங்கி நிறுவப்பட்டிருக்கிறது. இந்த நீர்த்தேக்க டாங்கிகள்; பெரிய ஸ்டீல் தூண்களால் சுமக்கப்படுகிறது. தரை மட்டத்திலிருந்து டாங்கியின் மேல் பாகம் 110 அடிகள் உயரமிருக்கிறது. இந்த தண்ணீர் தேக்க டாங்கிகள் 90,000,000 காலன்கள் பிடிக்கக் கூடியதாயிருக்கிறது. டாங்கி 4-பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பாகத்திலுள்ள தண்ணீர் செலவானபின் மற்ற பாகங்களிலுள்ள தண்ணீரை உபயோகப்படுத்தலாம்.

## மேட்டூர் அணைக்கட்டு

இந்த அணைக்கட்டு 5,300 அடி நீளமும், 176 அடி உயரமும் உள்ளது. 18,52,000 கனஅடி கஜங்கள் உள்ள இடப்பரப்பைக் கொண்டது. 54,500,000 சதுர அடி கொண்ட கட்டிடங்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. 9,35,000,000 கன அடி தண்ணீர் வரை தேக்கிவைக்க போதுமானதாய் இருக்கிறது.

## நைஜாம் சாகர் அணைக்கட்டு

இது இந்தியாவிலுள்ளவைகளில் இரண்டாவது அணைக்கட்டாக கொள்ளப்படுகிறது. மஞ்சிரா நதியின் ஊடே 14 அடி அகலமுள்ள மோட்டார்கள் செல்லத்தக்க 2 மைல் நீளமுள்ள சுவர்களால் ஆக்கப்பட்டிருக்கிறது.

இது உலகத்திலுள்ள அணைக்கட்டுகளைக்காட்டிலும் அபாரமான இழுக்கும் சக்தியையுடையது. 3000 கோடி கன அடி தண்ணீரைத் தேக்கிவைக்கத் தகுந்ததாயிருக்கிறது. இதன் ஆழம் அணைக்கட்டின் பாகத்தில் 106 அடிகள் 40 கிராமங்கள் உள்ள இடத்தை அடக்கிக்கொண்டிருக்கிறது. அதாவது 50 சதுர மைல்களைக்கொண்ட பிரமாண்டமான ஏரியாக விளங்குகிறது.

## பைகாரா ஹைட்ரோ எலக்டிரிக் திட்டம்

தென் இந்தியாவிலேயே இது முதலாவதாக அமைக்கப்படும் சிறந்த திட்டமாகும். இந்த வேலைப்பாட்டிற்கு $1\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவில் ஏராளமான கட்டட வேலைகளை வருங்கால விருத்திக்கென செய்திருக்கிறார்கள். பைகாரா ஆற்றிலிருந்து 7000 அடி நீளமுள்ள குழாய்கள் மூலம் கொண்டுபோய் 84,000,000 கன அடி தண்ணீரை அடக்கிவைக்கக்கூடிய அணையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அணையின் மேல் தளத்திலிருந்து விழும் தண்ணீர், செங்குத்தான பெரிய குழாய்களின் மூலமாக சென்று தரைக்கு 3080 அடிக்குக்கீழே ஏற்பட்டிருக்கும் டர்பைன் மில்லை இயக்கி மின்சார சக்தியை உண்டாக்குகிறது. இத்திட்டம் உலகத்திலுள்ளவைகளைக் காட்டிலும் மிக்க உன்னதமானது என சொல்லிக்கொள்ளப்படுகிறது. பைகாரா எலக்டிரிக் திட்டத்தினால் ஏற்படும் மின்சார சக்தியை தென்னிந்தியா முழுமையுமுள்ள, ஜில்லாக்களுக்கும் பட்டணங்களுக்கும் சப்ளை செய்யலாம்.

---

(5) ரெவினியூவை இதாவரி இனங்கள் மூலமாய் சரிக்கட்டவேண்டியது;

(6) சென்னை ஸ்திரீகள் நகர சங்கத்தார் சென்னை நகரசபை தேர்தல் காலத்தில் அபேக்ஷகர்களிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டபடி,

(a) எவருக்கும் உத்தியோகம் கொடுக்கும்படி அதிகாரிகளிடம் சிபார்சு செய்யாமலும்;

(b) உத்தியோகஸ்தர்களுடைய சம்பளம், படி முதலியவைகளை உயர்த்தும் விஷயமான எந்தப்பிரேரணையும் சட்டசபையில் கொண்டுவராமலிருப்பதும் தவிர அப்படிப்பட்ட பிரேரணையை ஆதரிக்காமலிருக்கவேண்டும்.

---

## இந்தியா சட்ட சபை
## இந்திய பிரிட்டிஷ் வியாபார ஒப்பந்தம்.

இந்திய பிரிட்டிஷ் வியாபார ஒப்பந்தம்பற்றிய ஸ்ரீமான் ஸாக் ஸிஙவின் கேள்விக்கு ஸர் முகமது ஸாபருல்லா பதிலளித்ததாவது:—ஆறு மாத நோட்டீஸ் காலம் முடிவடைந்த பின்னரும் பழைய ஒப்பந்தத்தைக் கவர்ன்மெண்டார் ஏன் நீடித்தார்களென்பதற்கான காரணத்தை வெளியிடுவது பொது நலத்திற்கு ஒத்ததாகாதெனக் கவர்ன்மெண்டார் கருதுகின்றனர். சென்ற செப்டம்பர் 17-ந்தேதி இந்தியா சட்டசபைக்கு அறிவிக்கப்படுவதற்குச்சிறிது காலமுன்னர், இம்முடிவு செய்யப்பட்டது. இந்த இடைக்கால ஏற்பாடு பற்றி உத்தியோகப் பற்றற்ற ஆலோசனை கூறுபவர்களைக்கலந்து கொள்ளவில்லை. இந்த ஏற்பாட்டின்படி புதிய ஒப்பந்தஞ் செய்துகொள்ளும் வரையில் ஒட்டவா ஒப்பந்தம் தற்காலிகமாக இன்னும் நீடிக்கப்படும் மற்ற ஏகாதிபத்திய தேசங்கள்பற்றிய வரையில் இந்த இடைக்கால ஏற்பாடு எவ்வித மாறுதலுமுண்டுபண்ணவில்லை.

---

## தேவை! தேவை!!

வர்ணங்களில் பிரசித்திபெற்ற "ப்ரோலாக்" வர்ணங்களை விற்பனை செய்வதற்கு தஞ்சை ஜில்லாவிலும் புதுக்கோட்டை, காரைக்குடி நகரங்களிலும் சப்-ஏஜண்டுகள் தேவை. விபரங்களுக்கு எழுதவும்.

ஸோல் ஏஜண்டு:—

**T. R. ரேங்கசாமி நாயுடு,**

வர்ணம் & கண்ணாடி வியாபாரம்,

பெரியகடை வீதி, திருச்சினாப்பள்ளி.

தீ விபத்து கப்பல் ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் நடத்துகிறது

உச்ச நிலையிலுள்ளது

# நியூ இந்தியா

ஏன் ?

இக்கம்பெனி இந்தியாவில் கப்பல், தீ, விபத்து முதலிய துறைகளில் பெருகிய வியாபாரம் செய்திருக்கிறது அம்மட்டோ! இந்த ஏழாவது வருடத்திலும் ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் ஒரு கோடியே எழுபத்தாறு லட்சம் ரூபாய்க்குச் செய்திருக்கின்றது என்பதை தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

எமது கம்பெனி ! மூலபலம், நீடிப்பு போதுஜன நம்பிக்கை முதலியவைகளைக்கொண்டது. என்பதற்குக் கீழ்கண்ட புள்ளி விபரங்களே அத்தாட்சியாகும்.

| | | |
|---|---|---|
| கையொப்பமிட்ட மூலதனம் | ரூ. | 3,56,05,275 |
| கொடுக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 71,21,055 |
| மொத்தம் நிதி | ரூ. | 1,94,84,774 |

இதுவரை கொடுக்கப்பட்ட உரிமைகள் (claims) மொத்தம் ஆறு கோடிக்குமேல் ஒடுகின்றது 1935-36 வருஷத்திய மொத்த ப்ரிமிய வருமானம் 86-லட்சத்துக்கு மேல் இருக்கிறது.

ஐந்துவருட 'ஆயுள்' இன்ஷ்யூரன்ஸ் வளர்ச்சிப்புள்ளி.

| | 1931—32 ரூபா. | 1932—33 ரூபா. | 1933—34 ரூபா. | 1934—35 ரூபா. | 1935—36 ரூபா. |
|---|---|---|---|---|---|
| புது அஷ்யூரன்ஸ் ... | 88,00,000 | 1,05,00,000 | 1,11,66,500 | 1,41,02,250 | 1,76,41,750 |
| மொத்தம் உள்ள கணக்கு | 1,46,00,000 | 2,19,00,000 | 2,84,25,834 | 3,85,53,292 | 5,29,23,711 |
| முதிர்ந்து கொடுக்கப் பட்ட உரிமைகள் ... | 41,000 | 1,26,000 | 1,29,750 | 2,15,100 | 2,76,592 |

விசேட நன்மை அளிக்கும் எங்கள் அரிய திட்டம் எது?

5000 ரூபாய் பாலிசிக்கு 18690 ரூபாய் கொடுப்பதாக செய்துகொள்ளும் ஒப்பந்த திட்டம்.

மெச்சத்தக்க எங்கள் முதல் போனஸ்.

4% விகித வட்டிப்படி ரூபாய் 10, 15-ம் போனஸ். 1936-ம் வருடமேற்படக்கூடிய மூன்றுவருட மதிப்புரை மேற் கண்ட தற்கால போனஸ் கொடுக்க உத்திரவாதம் செய்யப்பட்டிருக்கிறது.

வருட பிரிமியம்களின்மேல் 2½% குறைவு.

ஏஜன்சி மனுதார்கள் தேவை.

வேண்டுவோர்: **K. K. ஸ்ரீனிவாசன்** பிராஞ்சு மானேஜர், என்ற விலாசத்திற்கு எழுதுக.

**நியூ இந்தியா அசியூரன்ஸ் கம்பெனி** மதறாஸ் கிளை, 4, 5, முதல் லைன் பீச்சு

## பிப்ரவரி மாத பலன்கள்.

தேங்காய், கொப்பரை, தேங்கா யெண்ணெய், பிண்ணாக்கு, பொன், வெள்ளி, கறிச்சரக்கு, மருந்துச் சரக்கு, எள், நல்லெண்ணெய், உழுந்து, பயறு, கடலை, சீனி, பாக்கு, சர்க்கரை, பனங்கட்டி இவை சமவிலையாகும். ரப்பர், புகையிலை, மிளகாய், பழவகை, தேயிலை இவை விலையேறும். நெல், அரிசி, கிழங்கு வகை விலை குறையும்.

பாடகர், பிரசங்கிகள், வட்டித் தொழில் செய்பவர், எள் பயறு உழுந்து விற்பவர், சில்லரை வியா பாரிகள், பஞ்சு வர்த்தகர், இடையர் போர்த்தொழில் செய்பவர், அடி மை வேலை செய்பவர், மதுமாமிச வியாபாரிகள் இவர்களுக்குச் சுகக் குறைவும் மனக்கவலையுமுண்டாம். யானைப்பாகர், தோட்டக்காரர், சமய குருமார், எழுத்துவேலையாளர், சித் திரம் சிற்பங்களாற் சீவிப்பவர், அர சாங்க உத்தியோகஸ்தர் இவர்களுக் குத் தேகாரோக்கியமும் தனலாப மும் உண்டாம்.

அந்நிய சமயங்கள் விருத்தியா கும். சற்சமயவிருத்தி குன்றும். பிராமணர் வைசியர்களுக்கு லாப மும், அரசர்களுக்குகஷ்டமும், சூத்தி ரர் முதலாயினோர்க்குச் சமசுகமுண் டாகும். மேல் தேசங்களில் இராச் சியங்களுக்குச் சத்துருக்களால் பய மும் கவலையுமுண்டாம். ஆயுத உற் பத்தி அதிகரிக்கும். கீழ்த்தேசங் களில் அரசியற் சுயாதீனம் விருத்தி யாகும். பொதுசனக்கிளர்ச்சி பல மடையும்.

# சாமான்களுக்கு ரயில்வேசார்ஜுகள். (RAILWAY RATES)

The Railway do not accept responsibility for the correctness of these quotations a reference should be made to the Local Rate Advice & Foreign Rate Circulars issued by the S. I. Ry.

| சாமான்கள். | எங்கிருந்து | எந்த இடத்துக்கு | ரேட்டு மணங்குக்கு | | எந்த தேதியிலிருந்து | ஷரா. |
|---|---|---|---|---|---|---|
| | | | அ. | பை. | | |
| புட்டிகள். | காராட். | எர்ணாகுளம் | 16 | 0 | 2—11—36 | |
| பித்தளைகள். | கட்சிலா | கள்ளிக்கோட்டை | 22 | 0 | 20—11—36 | |
| ,, | ,, | எர்ணாகுளம் | 22 | 0 | ,, | |
| ,, | ,, | தூத்துக்குடி | 22 | 0 | ,, | |
| செம்புகள் | முலண்டு | எர்ணாகுளம் | 14 | 3 | 6—11—36 | |
| ,, | நாகப்பட்டணம் | செகந்தராபாத் | 12 | 8 | 15—11—36 | |
| ,, | திருவனந்தபுரம் | பதராவதி | 8 | 1 | 25—11—36 | |
| சர்க்கரை. | மண்டயா | பாலக்காடு | 11 | 4 | 1—11—36 | |
| ஜவுளி. | உடுமலைபேட்டை | காக்கிநடா | 23 | 0 | 7—11—36 | |
| வெல்லம் | அனகபள்ளி | திருநெல்வேலி | 14 | 6 | 20—11—36 | |
| நெல் | செருக்காரா | சோரனூர் | 0 | 9 | 7—12—36 | |
| ,, | ,, | திருச்சூர் | 2 | 0 | ,, | |
| ,, | சித்தலவாய் | கரூர் | 0 | 8 | 25—11—36 | |
| அரிசி | ஷோரனூர் | செருக்காவி | 0 | 9 | 7—12—36 | |
| ,, | திருச்சூர் | ,, | 2 | 0 | ,, | |
| ,, | செங்கல்பட்டு | புதுச்சேரி | 2 | 9 | ,, | |
| நிலக்கடலை | குட்டக்குடி | கூடலூர் | 2 | 3 | ,, | |
| ,, | ஈரோடு | கள்ளிக்கோட்டை | 9 | 3 | 3—12—36 | |
| ,, | மகுடஞ்சாவடி | ,, | 9 | 3 | ,, | |
| ,, | சேலம் மார்க்கட் | ,, | 9 | 3 | ,, | |
| ,, | மகுடஞ்சாவடி | கூடலூர் | 7 | 7 | 23—11—36 | |
| தண்டவாளம். | எர்ணாகுளம் | ஈரோடு | 6 | 3 | 1—12—36 | |
| ,, | ,, | தஞ்சாவூர் | 8 | 5 | ,, | |
| ,, | ,, | திருச்சினாப்பள்ளி | 7 | 11 | ,, | |
| வெற்றிலை | போத்தனூர் | பாலக்காடு | 2 | 0 | 2—1—37 | |
| சிமண்டு | மதுக்கரை | கூடலூர் | 5 | 0 | 15—12—36 | |
| ,, | ,, | மாயவரம் டவுன் | 5 | 10 | ,, | |
| தேங்காய் | கள்ளிக்கோட்டை | படகாரா | 1 | 8 | 2—1—37 | |
| பருத்தி | கோயம்புத்தூர் | திருச்சி கூட்ஸ் | 8 | 8 | ,, | |
| ,, | சேலம் மார்க்கட் | ,, | 7 | 7 | ,, | |
| ,, | திருப்பூர் | ,, | 7 | 2 | ,, | |
| ,, | எட்டாபூர் | சேலம் மார்க்கட் | 1 | 6 | 15—1—37 | |
| எட்டிக்காய் | செருக்காரா | எர்ணாகுளம் | 3 | 10 | 16—11—36 | |
| ,, | ,, | திருச்சூர் | 3 | 1 | ,, | |
| மாவு | தூத்துக்குடி | ராமனாதபுரம் | 4 | 0 | 13—11—36 | O. R. L |
| ,, | ,, | ,, | 3 | 6 | ,, | |
| அரிசி. | கண்ணனூர் | கசர்காட் | 2 | 0 | 20—12—36 | |
| தான்யங்கள் | தூத்துக்குடி | ராமநாதபுரம் | 4 | 0 | 13—11—36 | O. R. L |
| ,, | ,, | ,, | 3 | 6 | ,, | |
| நிலக்கடலை | அகரம்சிப்பந்தி | புதுச்சேரி | 4 | 6 | 24—12—36 | |
| ,, | கோயம்புத்தூர் | எர்ணாகுளம் | 7 | 1 | 2—1—37 | |
| ,, | ஈரோடு | கள்ளிக்கோட்டை | 9 | 0 | 26—12—36 | |
| ,, | சங்கரி துருக்கம் | ,, | 9 | 0 | ,, | |
| ,, | தூத்துக்குடி | ராமநாதபுரம் | 4 | 0 | 13—11—36 | |
| சுண்ணாம்பு ஜீரா | திருச்சூர் | வல்லபுழா | 1 | 3 | 12—11—36 | |
| ,, | கடலண்டி | ஒலவக்கோடு | 2 | 7 | 2—1—37 | |
| ,, | ,, | ஒட்டபாலம் | 2 | 1 | ,, | |
| உப்பு | தூத்துக்குடி | ராமநாதபுரம் | 4 | 0 | 13—11—36 | |
| ,, | கூடலூர் | சிதம்பரம் | 1 | 0 | 16—11—36 | |
| ,, | தூத்துக்குடி | ராமனாதபுரம் | 3 | 6 | 13—11—36 | |
| சர்க்கரை | ,, | ,, | 4 | 0 | ,, | |
| தேக்கு | நிலாம்பூர் ரோடு | திருச்சூர் | 2 | 3 | 2—1—37 | |
| ,, | ராணியம்பலம் | ,, | 2 | 3 | ,, | |
| ,, | வருச்சூர் | வல்லபுழா | 1 | 3 | 13—11—36 | |

# REVIEWS. மதிப்புரைகள்.

### தனவணிகன் பொங்கல் மலர்.

தனவணிகன் பொங்கல் மலர் வெகு அழகாக ஏராளமான படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. பல அறிஞர்களால் எழுதப்பட்டு கட்டுரைகள், அருமையான கதைகள் இனிய பாட்டுகள் மலிந்து கிடக்கின்றன. சுதந்தரதேவியின் வர்ணப் படம் மிக கருணையுடன் வரவேற்கிறது. விலை அணா நான்கு.

### விமர்சனம்.

சென்னையில் வெளியிடப்படும் விமர்சனம் என்னும் மாதமிருமுறைப் பத்திரிகை நம் தேசத்தின் நிலைமையை விமர்சனம் செய்வதுடன் தேசம், கைத்தொழில், பொருளாதாரம், அறிவு, அரசியல் ஆகிய துறைகளில் முன்னேற்றமடையும்படியான வகையில் தொண்டுசெய்யும் நோக்கத்துடன் பிரசுரிக்கப்படுகிறதாம். இதன்வருட சந்தா அணா பன்னிரண்டு.

### செல்வரத்தினம்

இந்த நாவல் ஓர் இனிய கற்பனை சரித்திரமாக யிருந்தபோதிலும் படிக்குந்தோறும் அதிசயத்தையும் இன்பத்தையும் உண்டுபண்ணுகிறது. இந்நூல் 20 அத்யாயங்களையுடையது. ஒவ்வொரு அத்யாயம் ஆரம்பத்தில் திருக்குறளிலிருந்து ஒவ்வோர் பாட்டுகள் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இனிய தமிழில் எளிய நடையில் நல்லூர் வே. க. நவரத்தினம் அவர்களால் எழுதப்பட்டு யாழ்ப்பாணம், கொக்குவில், சோதிடப்பிரகாசயந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டது. இதன் விலை ரூ. 1-25.

### காலண்டர்கள் (CALENDARS)

கீழ்கண்டவர்களிடமிருந்து 1937 வருடகாலண்டர்கள் வரப்பெற்றதை வந்தனத்துடன் பெற்றுக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீரங்கம் புஸ்தகவியாபாரம், ஆர் ரெங்கசாமி பிள்ளை (அழகிய லேடி காலண்டர்).

திருச்சினுப்பள்ளி, சமஸ்பிரான் தெரு, புது வயிர தொழிற் சாலை, டி. எஸ். ராமசாமி நம்பியார் (தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியது).

திருச்சினுப்பள்ளி, பெரிய கடை வீதி, வர்ணம், கண்ணாடி வியாபாரம் டி. ஆர். ரெங்கசாமி நாயுடு (அழகிய படங்கள் பலவர்ணங்களுடையது).

Brolac Paint Calendar with the photo of King Edward VIII from the Agent Mr. T. R. Rangaswamy Naidu, Paint Merchant, Trichinopoly.

### Birmingham.

